தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, பிப்ரவரி 14, செவ்வாய்க்கிழமை,

மாசி 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலை போன்றது: பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக்கொள்வதைப் போன்றது.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவு குறிதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. பி. ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 3–12–1983 ஆம் தேதியன்றும், திரு. எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் 5–12–1983 ஆம் தேதியன்றும், திரு. ஜி. நாராயணசாமி நாயுடு அவர்கள் 18–12–1983 ஆம் தேதியன்றும், திரு. எஸ். சங்கிலி அவர்கள் 5–1–1984 ஆம் தேதியன்றும், திரு. வி. பாஷ்யம் ரெட்டி அவர்கள் 6–2–1984 ஆம் தேதியன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பஷீர் அகமது சயீத் அவர்கள் 7–2–1984 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையும் தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோவில் (செ.வ.) தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

128-257—1

திரு. ஜி. நாராயணசாமி நாயுடு அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை தொகுதியிலிருந்தும், 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறை (மாயூரம்) தொகுதியில் இருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். சங்கிலி அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும், 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும், திருநெல்வேலி மாவட்டம் கடம்பூர் (செ.வ.) தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வி. பாஷ்யம் ரெட்டி அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டுவரை சென்னை நகரம் புரசைவாக்கம் தொகுயிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். 1939 ஆம் ஆண்டிலிருந்து 1946 ஆம் ஆண்டு வரை செம்பியம் ஊராட்சி மன்றத் தலைவராகவும், 1952 ஆம் ஆண்டு வரை சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பஷீர் அகமது சயீத் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மற்றும் தென்னாற்காடு முகமதன் கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவர் 1926 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1931 ஆம் ஆண்டிலிருந்து 1937 ஆம் ஆண்டு வரையும் சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். தேசியவாதியான இவர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டவர். மேலும் 15 ஆண்டுகள் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

சென்னை உயர்நீமன்ற நீதிபதியாக 1949இல் நியமனம் செய்யப்பெற்று பணியாற்றியுள்ளார். இவர் சிறந்த கல்வியாளர். குறிப்பாக முஸ்லீம் பெண்கள் கல்வியில் தனி சிரத்தை எடுத்தார். சென்னை பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மற்றும் அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் அமைப்புகளில் பணியாற்றியுள்ளார். ஜம்மு காஷ்மீர் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தராக நியமனம் செய்யப்பெற்று, சொந்தக் காரணங்களுக்காக அப்பதவியை மறுத்தவர். சென்னையில் சவுத் இண்டியன் எஜுகேஷன் டிரஸ்ட் என்ற கல்வி நிறுவனத்தை நிறுவினார். சென்னையில் எஸ்.ஐ.இ.டி. மகளிர் கல்லூரியையும், புதுக் கல்லூரியையும் 1951 ஆம் ஆண்டு நிறுவினார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள். அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. இரங்கல் தீர்மானம்

சோவியத் ஒன்றிய குடியரசுத் தலைவர்
திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் மறைவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் முதல் சோவியத் ஒன்றிய குடியரசின் தலைவராக இருந்து வந்த திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்துக்கொள்கிறது."

ஆண்ட்ரபோவ் சிறந்த அரசியல் வல்லுநர். அணு ஆயுதப் போட்டியை தடுத்து நிறுத்துவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அவர் உலகத்தவரால் என்றென்றும் போற்றப்படுபவர். அவர் இந்திய சோவியத் உறவுகளை வலுப்படுத்த தக்க நடவடிக்கைகளை எடுத்து இந்தியாவின் உற்ற நண்பராக விளங்கினார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கும், சோவியத் அரசுக்கும், சோவியத் மக்களுக்கும் ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது."

சோவியத் ஒன்றியத்தினுடைய குடியரசுத் தலைவராக திகழ்ந்த திரு. யூரிவிளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைவின் மூலம் உலகம் ஒரு ஒப்பற்ற தலைவரை இழந்து இருக்கிறது. சோவியத் ஒன்றியம் மிகச் சிறந்த பாதுகாவலர் ருவரை இழந்து இருக்கிறது. இந்தியா ஒரு பெரும் நண்பரை இழந்து இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். இந்தியாவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையிலே நீண்ட பெரும் காலமாக நட்புறவு நீடிக்க வகை செய்தும் அதே நேரத்தில் ஒத்துழைக்கும் போக்கையும், உறு துணையாக நிற்கும் தன்மையையும் தொடர்ந்து வளர்த்துக் கொண்டு வந்த